# சங்ககால மகளிரின் கூந்தல் வகைப்பாடு

சி. ஜோதிலட்சுமி
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
மருதர் கேசரி ஜெயின் மகளிர் கல்லூரி
வாணியம்பாடி

**முன்னுரை**

சங்க இலக்கியம் என்பது எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் ஆகும். சங்ககாலம் கி.மு 2ஆம் நூற்றாண்டு முதல் கி.பி 2ஆம் நூற்றாண்டு வரை என்று கருதுகின்றனர். சங்க காலத்தில் மகளிர் தங்கள் கூந்தல்களை அலங்காரம் செய்து கொண்டுள்ளதையும், கூந்தலின் வேறுபெயர்களையும் காணமுடிகிறது. இன்றைய பெண்கள் தங்களின் கூந்தலை அதாவது சிகை அலங்காரம் செய்து கொள்வதைப்போல் சங்ககாலத்தில் மகளிர் அலங்காரம் செய்துள்ளனர் என்பதைச் சங்க இலக்கியங்கள் கூறியிருப்பதைச் சான்றுகளுடன் இக்கட்டுரையின் வாயிலாகக் காண்போம்.

**பழமொழி**

"கூந்தலுள்ள மகராசி கொண்டையும் போடுவா!
அவுத்தும் போடுவா."

என்ற பழமொழியை அறியாத தமிழ் மக்கள் கிடையாது. பண்டைய காலத்தில் ஆண்களுக்கு மட்டும் முடிதிருத்தகங்கள் இருந்தன. சிலரின் வீடுகளுக்கே முடிதிருத்துபவர் வந்து ஆண்களை அழகுபடுத்திவிட்டு சென்றுள்ளனர். பெண்களுக்கு அழகு நிலையங்கள் என்பது சங்க காலத்தில் இல்லை. ஆனால் இன்று பெண்களுக்கான அழகு நிலையங்கள் தெருவுக்கு இரண்டு என்ற விதத்தில் வந்து விட்டன. பெண்களும் தங்களை அழகுப்படுத்திக் கொள்வதில் அதிகம் விருப்பம் காட்டி வருகின்றனர். அதில் மிகவும் சிகை அலங்காரம் அந்த காலம் தொட்டு இன்று வரை இன்றியமையா இடம் பெற்று திகழ்கிறது.

**கூந்தலின் வேறு பெயர்கள்**

சங்க இலக்கியங்களில் கூந்தலின் வேறு பெயர்களாக அளகம், கூந்தல், பித்தை, முச்சி, ஓதி, கூழை, கதுப்பு, குழல் போன்றவை கூறப்படுகின்றன.

கலித்தொகையில் கூந்தல் "ஐம்பால்" என்ற சொல்லால் குறிக்கப்படுகிறது. கலித்தொகை இலக்கியம் (131–39) பெண்களை "மணங்கமழ் ஐம்பாலார்" என்று குறிப்பிடுகிறது.

**கூந்தலின் வகைகள்**

சங்ககால மகளிர் கூந்தலை ஐந்து வகைகளாக வகைப்படுத்தியுள்ளனர். அவை 1. முடி 2. சுருள் 3. குழல் 4. பனிச்சை

ஐந்து பகுதிகளாக மகளிர் அலங்காரம் செய்யப்படுவதால் கூந்தலுக்கு ஐம்பால் என்று பெயர்.

**1. முடி**

கூந்தலை உச்சியில் கூட்டி முடிந்தால் அதற்கு முடி என்று பெயர்.

**2. கொண்டை**

கூந்தலை பக்கவாட்டில் முடிந்தால் அதற்குக் கொண்டை என்று பெயர்.

**3. சுருள்**

கூந்தலை பின்னிச் செருகினால் அதற்குச் சுருள் என்று பெயர்.

**4. குழல்**

கூந்தலைச் சுருட்டி முடிந்தால் அதற்கு குழல் என்று பெயர்

**5. பனிச்சை**

கூந்தலைச் சடையாகப் பின்னிவிட்டால் அதற்குப் பனிச்சை என்று பெயர்.

"மகளிர் முடிந்த மண்ணாமுச்சி
நெய் கனிவீழ் குழல் அகப்படத் தைஇ" – அகம் 73

மகளிரின் கூந்தல் பின்னிய நிலையில் தாழ்ந்து வீழ்ந்திருக்கும் கூந்தலில் எண்ணெய் தடவி ஒரு சேரக் கட்டிமுடிந்திருக்கிறாள்.

**மலைபடுகடாம் இலக்கியம்**

குறமகள் ஒருத்தி முச்சி முடிந்து நறுமலர் செருகியிருந்த அழகை மலைபடுகடாம் கூறுகிறது.

"நறுமலர் அணிந்த நாறு இருமுச்சிக்
குறமகள்." – மலைபடுகடாம்.182

பல மலர்கள் சூடிய ஒரு பெண்ணின் முச்சியைச் சூழ்ந்து கொண்டு வண்டு மொய்ப்பதை ஐங்குறுநூறு தெரிவிக்கிறது.

"பல்பூண்
தாதுஉண்வெறுக்கைய ஆகிஇவள்
போது அவிழ் முச்சி ஊதும் வண்டே." – ஐங் . 93

பூப்பூவாகத் தேடிச்சென்று தேனருந்துவதில் அலுத்துப்போன வண்டுஇவளது கூந்தல் முச்சியில் பலவகை மலர்கள் அணியப்பட்டிருந்தால் சுற்றிச்சுற்றி வந்து தேன் எடுக்கிறதாம்.

"கொண்டைக் கூழை தண்தழைக் கடைசியர்." – புறம் . 61

பின்னிய கூந்தலின் கடைசிப் பகுதி குழன்று இருந்தால் அதனைப் பித்தை என்று கூறுவர். பித்தையில் கரிகாலன் தாமரை சூடி உபசரித்த நிகழ்வை பொருநாற்றுப்படை – 160 கூறுகிறது.

கூந்தலுக்கு நறுமணம் ஊட்டி கூந்தலை அலங்காரம் செய்வதை மலைபடுகடாம் கூறுகிறது.

"வதுவை நாறும்வண்டு கமழ்ஐம்பால்
மடந்தை மாண்ட நுடங்கு எழில் ஆகத்து
அடங்குமயிர் ஒழுகிய அவ்வாய் கடுப்ப
அகடு சேர்பு பொருந்த அளவினிற் திரியாது." – மலைபடுகடாம் . 30

"இன்மணிச் சிலம்பின் சில்மொழி ஐம்பால்
பின்னொடு கெழீஇய." – கலி . 125

சில பெண்கள் குளித்து முடித்துப் பின்னாலும் முடியாமலும் அப்படியே முதுகுப் புறமாக பறக்கவிட்டிருந்த செய்தியை நெடுநல்வாடை இயம்புகிறது.

"ஆரம் தாங்கிய அலர்முலை ஆகத்துப்
பின் அமை நெடுவீழ் தாழ துணைதுறந்து
நல்நுதல் ஊறிய சில்மெல் ஓதி." – நெடுநல் வாடை . 137

சிறுபாணாற்றுப்படையில் கூந்தல் தலைப் பின்னலை வித்தியாசமாக பார்க்கிறது.

"பிடிக்கை அன்ன பின்னு வீழ் சிறுபுறத்து." – சிறுபாணாற்றுப்படை 191

பெண்களின் பின்புறப் பின்னல் சடை, யானையின் துதிக்கை போல நீண்டு தாழ்ந்து வளைந்து இருக்கின்ற செய்தியை வெளிப்படுத்துகிறது.

கூந்தலைக் குழலாக முடிப்பதைக் கதுப்பு எனக் கூறுவர். இதனை

"கார் கொள் கூந்தல் கதுப்பு அமைப்போரும்." – பரிபாடல் . 12–15

எனப் பரிபாடல் குறிப்பிடுகின்றது. இவ்வாறாக ஐந்துவகையாக மகளிரின் கூந்தலை ஒப்பனை செய்துள்ளனர். குறிஞ்சி நிலத்தைச் சார்ந்த கொடிச்சியர் தங்கள் கூந்தலை நறுமணப் பொருள்கள் இட்டுத் தேய்த்துக் குளித்த செய்தியை கூறுகிறது. அகநானூறு பாடலில் கூந்தலைப் பற்றிக் குறிப்பு இடம் பெற்றுள்ளது.

"உரைத்த சாந்தின் ஊரல் இருங்கதுப்பு
ஐதுவரல் அசைவலி ஆற்ற கைபெயரா

ஓவியம் வார்மயில் ஊரினள் கொடிச்சி

பெருவரை மருங்கில் குறிஞ்சிபாட." – அகம் 102

நற்றிணைப் பாடலில் மகளிர் கடலில் நீராடி முதுகுப்புறத்தே இருண்டு தாழ்ந்து வியங்கிய கூந்தலைப் பிழிந்து உலர வைத்த செய்தியைக் கூறுகிறது. தலைவியின் கூந்தலை ஈரம்போகத் தலைவன் பிழிந்து உதவிய செய்தியையும் விளக்குகிறது.

"உதுவே பொம்மற் படுதிரை நம்மோடு ஆடி

புறம்தாழ்பு இருளிய பிறங்கு குரல் ஐம்பால்

துவரினர் அருளிய துறையே." – நற் 96

பலவகையான மயிர்சாந்துகள் கூந்தலில் பூசி குளித்து முடிந்து பலவகைளான நறுமண மலர்கள் சூடிய தலைவியின் கூந்தல் தலைவர் உறங்குவதற்கு தலையணையாக இருந்த செய்தியை அகநானூறு கூறுகிறது.

"புறம் தாழ்

அம்பினை நெடுந்தோள் தங்கி,தும்பி

அரியினம் கடுக்கும் சுரிவணர் ஐம்பால்

நுண்கேழ் அடங்கவாரி. பையுள் கெட

நுன்முகை அதிரல் போதொடு குவளைத்

தண் நறுங் கமழ் தொடைவேய்ந்த நின

மண் ஆர் கூந்தல் மரீஇய துயிலே." – அகம் 223

தலைவி கூந்தலைப் பேணிய செய்தி குறிக்கப்பட்டுள்ளது, கூந்தல் அவளது மூங்கில் தோளில் தங்கியிருக்கிறது. வண்டினங்கள் போல் கூந்தல் சுருண்டிருக்கிறது. அப்படி இருக்கிற கூந்தலை அடங்கவாரி மலர்ந்த நறுமணம் வீசுகின்ற காட்டு மல்லிகைப்பூவை அவளுடைய கூந்தலில் செருகியுள்ளாள். அந்தக் கூந்தலின் மேல் தலைவன் உறங்குகிறான். பிரிந்து சென்ற தலைவன் விரைவில் வருவான். இவ்வாறாக உறங்கிய என் தலைவன் வேறு இடங்களில் அதிக நாட்கள் தங்கமாட்டான் என்று அகநானூறு பகர்கிறது.

" மடங்கா உள்ளமொடு மதிமயக்குறாஅ

பொருள் யின் நீடலோ இலர் நின்

இருளஜங் கூந்தல் இன்துயில் மறந்தே" அகம் . 223

தலைவன் தலைவியின் தலைமுடியைப் பற்றி பிடித்துக்கொண்டு அவளது வளையலைப் பறித்த செய்தியை நற்றிணை கூறுகிறது.

"ஊழ் அடி ஒதுங்கினும் உயங்கும் ஐம்பால்

சிறுபல் கூந்தல் போது பிடித்து அருளாது

எறிபோல்சிதைய நூறவும்." அகம் . 145

அக்காலத்தில் ஆண்கள்தான் முடியை வெட்டுவார்கள். பெண்கள் வெட்டவில்லை ஆனால் இக்காலத்தில் பெண்கள் அழகு நிலையங்களுக்குச் சென்று தங்களின் கூந்தலை வெட்டி சீர்செய்கின்றனர். இந்தச் செய்தி சங்க இலக்கியத்திலும் இருப்பதை அறிய முடிகிறது. இதனைக் கலித்தொகை பாடல் கூறுகிறது.

"எஃகு இடைதொட்டகார்க் கவின் பெற்ற ஐம்பால்

மை அற விளங்கிய துவர் மணல்" கலி . 32

கத்தரிகோல் கொண்டு ஒழுங்கு செய்யப்பட்ட கார்மேகத்தின் அழகினைப்பெற்ற மகளிரின் கூந்தலைப் போல திகழ்கிறது.

இளம்பருவத்தில் பெண்களின் கூந்தல் அடர்த்தியாகவும், வளமாகவும் இருக்கும். வயது முதிர்ந்த பின் கூந்தலின் அடர்த்தி குறைந்த பிறகு சவுரி முடியினை வைத்து அழகுப்படுத்திப் கொள்கின்றனர்,

தலைவனை காதலிக்கும்போது நெய் தடவி நீலமணி ஒளிவிட்டதுபோல இருந்த என் இளம்பருவத்துக் கூந்தலைப் பாராட்டினாய். இப்போது ஆண்டுகள் சில கடந்தன. திருமணமும் நடந்தேறியது. என் கூந்தலும் வளமிளந்தது. என்னை நீயும் பாராட்டவில்லை என்று கவலையுற்ற செய்தியை அறியமுடிகிறது.

"நெய் தடவி இடை நீவி மணி ஒளி விட்டன்ன

ஐவகை பாராட்டினாய் மற்றும்எம் கூந்தல்

செய்வினை பாராட்டிகையோ? ஐய." கலி . 22–12

**நிறைவுரை**

சங்க கால மகளிரின் கூந்தலின் வகைகளையும் கூந்தலை அலங்கரித்த விதங்களையும் நீராடிய முறைகளையும் கூந்தலின் மேல் தலைவன் உறங்கிய நிலைகளையும் கூந்தலின் தன்மைகளைப் பற்றியும் கூந்தலோடு ஒப்புமைப்படுத்தும் விதமாக யானையின் தும்பிக்கையையும், கடலின் நீரையும், அகன்ற கரிய மேகத்தையும் காடுகளிலும் மலைகளில் கிடைக்கும் நறுமணம் வீசக்கூடிய பூக்களையும் மூங்கில், வண்டினங்கள் போன்றவற்றையும் கூறியுள்ளனர்.